கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.
முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 25ஆம் நாள் புதன்கிழமை
I.A.No.1/2025 in O.S.No.56/2025

V.T.முனியன் . . . மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

ஜெ.சஞ்சீவ் ஜெயப்பிரகாஷ் . . . எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 10.03.2026ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.R.மண்ணரசு அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.நாராயணன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் உ.ந.வி.மு.ச கட்டளை 26 விதி 10A –ன் படி மனுதாரரால் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இம்மனுவின் மனுதாரர். மேற்படி வழக்கில் பிரதிவாதி. மேற்படி எதிர்மனுதாரர்/வாதி தனக்கு எதிராக மேற்படி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அசல் வழககில் மனுதாரர், எதிர்மனுதாரர்/வாதியிடம் 06.08.2022 அன்று ஏதோ ரூ.2,50,000/–ஐ



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.25 12:17:16 +0530

கடனாக வாங்கிக் கொண்டு, அதற்காக ஒரு புரோநோட்டு எழுதிக் கொடுத்ததாகவும், அதன் முன்னிலைக்கு மேற்படி கடன் தொகையை மனுதாரர் பைசல் செய்ய உத்தரவிடுமாறும் கோரி மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி எதிர்மனுதாரர்/வாதியிடம் மனுதாரர் எப்போதும எவ்வித கடன் தொகையும் வாங்கவில்லை என்றும், மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா புரோநோட்டு மோசடியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த புரோ நோட்டில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், விளக்கமாக எடுத்துரைத்து, மேற்படி புரோ நோட்டினை விஞ்ஞான பரிசோதனைக்கு அனுப்ப கோரியும், மனுதாரர் பதிலுரை தாக்கல் செய்திருந்ததாகவும், மனுதாரர் மேற்படி எதிர்மனுதாரர்/வாதியிடம் வாங்காத கடனுக்கு அதை பைசல் செய்யக்கோரி சட்ட விரோதமாக மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்நிலையில் மேற்படி புரோ நோட்டில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என மனுதாரர் நிரூபிக்க வேண்டியது அவசியமும், நியாமும் ஆகின்றது என்றும், அதன்படி மேற்படி தாவா புரோநோட்டில் உள்ள மனுதாரர் செய்ததாக கூறப்படும் மேற்படி கையெழுத்தினையும், வாதி தனக்கு அளித்த சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்டு மனுதாரர் கையெழுத்திட்டு அளித்த அஞ்சல் ஒப்புகை அட்டை 08.12.2020 தேதியிட்ட மனுதாரர் ஒரு சதீஷ் என்பவருக்கு செய்து கொடுத்த பதிவு அடமான பத்திரம் சான்றிட்ட நகல் ஆகியனவற்றில் உள்ள தனது கையெழுத்துகளையும் விஞ்ஞானப்பூர்வமாக பரிசோதித்து அதன் உண்மைத்தன்மையை அறிய ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகின்றது என்றும், இல்லையேல் தனக்கு ஈடு செய்ய இயலாத அளவிற்கு பெருத்த கஷ்ட,



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.25 12:17:25 +0530

நஷ்டங்களும், பெருத்த அநீதியும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 06.08.2022 தேதியிட்ட தாவா புரோநோட்டில் உள்ள மனுதாரர் செய்ததாக கூறப்படும் கையெழுத்தினை விஞ்ஞான பரிசோதனைக்கு அனுப்பி, அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிந்து அதன்படி அறிக்கையை சமர்ப்பிக்க மேற்படி புரோ நோட்டினை விஞ்ஞான பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி, அறிக்கை பெற தக்க உத்தரவிட வேண்டி மனுதாரர்/பிரதிவாதி பரம் மனுதாக்கல்.

## 3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம்

மனுதாரரின் மனு பொய்யானது, மோசவிதமானது என்றும், இவ்எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள விஷயங்களைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவராவார் என்றும், மனுதாரர் அவரது மனுவில் 06.08.2022அன்று இவ்எதிர்மனுதாரரிடம் ரூ.2,50,000/- கடன் பெறவில்லை என்றும, மனுதாரர் இவ்எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்துள்ள 06.08.2022 தேதியிட்ட புரோநோட்டு Forgery யானது என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளதனை இவ்எதிர்மனுதாரர் திட்டவட்டமாக மறுக்கின்றார் என்றும், கடுமையான ஆட்சேபனையும் செய்கின்றார் என்றும், மனுதாரர், இவ்எதிர்மனுதாரரிடம் 06.08.2022 அன்று ரூ.2,50,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு அந்தத் தொகைக்கு மனுதாரர் மேற்படி தேதியிட்ட புரோநோட்டில் கையெழுத்துச் செய்து இவ்எதிர்மனுதாரரிடம் அளிக்கப்பட்ட புரோநோட்டாகும் என்றும், மேற்படி புரோநோட்டினை இவ்எதிர்மனுதாரர் கனம் நீதிமன்றத்தில் உரிய பரிகாரம் கோரி மனுதாரா மீது தாக்கல் செய்துள்ளார் என்றும்,மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் குறிப்பிட்டு ஆட்சேபணை செய்யாத நிலையிலும்,



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.25 12:17:32 +0530

மேற்படி மனுவினை எதிர்மனுதாரருக்குச் சார்வு செய்யும்போதும், எதிர்மனுதாரர் தரப்பில் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் Contemporary ஆவணத்துடன் தாக்கல் செய்துதான் மனு தாக்கல் செய்யவேண்டும் என்று ஆட்சேபனையும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு எதனடிப்படையில் எந்தக் கையெழுத்தை அவர் ஒப்புக்கொள்கின்றார் எதை ஆட்சேபணை செய்கின்றார் என்பதனையஹம், எந்த ஆவணக் கையெழுத்துடன் ஒப்பீடு செய்யவேண்டும் என்றும் தெளிவுபட பதிலுரையில் தாக்கல் செய்யாததாலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுவில் Contemporary ஆவணம் தாக்கல் செய்யாமலும் மேற்படி மனு தாக்கல் செய்து உள்ளதால், மேற்படி மனு அடிப்படைத்தன்மையற்ற ஒன்றாகும் என்றும், தள்ளுபடி செய்யத்தக்க ஒன்றாகும் என்றும், எதிர்மனுதாரரை அலைக்கழிக்கவும், கால நீட்டிப்பு செய்யவேண்டும் என்ற எண்ணத்திலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினைச் செலவுடன் தள்ளுபடி செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி எதிர்மனுதாரர் பரம் எதிருரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியும், எதிர்மனுதாரர் வாதியும் ஆவார்கள். எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா புரோநோட்டில் கண்டுள்ள தொகையினை அசல் வட்டியுடன் பிரதிவாதி வாதிக்கு செலுத்தும்படிக்கு



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.25 12:17:39 +0530

2025ம் ஆண்டு பிரதிவாதிக்கு எதிராக இத்தாவாவினை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தரப்பில் 02.06.2025 தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையினை பரிசீலனை செய்து 19.06.2025 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1, வா.சா.2 விசாரிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரனைக்காக அசல் வழக்கானது நிலுவையிலிருந்து வரும் நிலையில் தாவா புரோநோட்டிலுள்ள கையெழுத்தினை 08.12.2020 தேதியிட்ட மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரர் புரோநோட்டிலுள்ள கையெழுத்து குறித்து பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், புரோநோட்டிலுள்ள ஆண்டிற்கான ஆவணத்தை மனுதாரர் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள அடமானக்கடன் பத்திரமானது புரோநோட்டு ஏற்படுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட ஆவணம் என்றும், அந்த ஆவணமானது கையெழுத்தினை ஒப்பிட்டு பார்ப்பதற்கு ஏற்புடைய ஆவணம் இல்லை என்றும், அசல் வழக்கின் விசாரனையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலேயே மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்று எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா புரோநோட்டானது வாதியால் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதே தவிர தாவா

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.25 12:17:46 +0530

புரோநோட்டிலுள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்று குறிப்பிட்டு மறுத்து எதுவும் கூறவில்லை. அந்த வகையில் பார்க்கும்போது தாவா புரோநோட்டிலுள்ள கையெழுத்தினை பிரதிவாதி ஒத்துக்கொண்டுள்ளார் என்றே அர்த்தமாகிறது. மேலும் வாதி இத்தாவாவினை தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார். அந்த அறிவிப்பில் தெரிவித்துள்ள சங்கதிகளையும், மற்றும் தாவா புரோநோட்டிலுள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்று மறுத்தும் பிரதிவாதி எந்தவொரு பதில்வழக்கறிஞர் அறிவிப்பும் கொடுக்கவில்லை. மேலும் பிரதிவாதி வாதி தரப்பு சாட்சியம் விசாரிக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சியமானது முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்து வரும் நிலையில் காலம் கடந்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்து வருவதாலும், பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் புரோநோட்டிலுள்ள கையெழுத்தினை மறுக்காத நிலையில் மனுதாரர் மனுவில் கூறியுள்ள பரிகாரத்தினை பெறுவதற்கு அருகதையற்றவர் ஆவார். மேலும், அசல் வழக்கின் விசாரணையை விரைந்து முடித்திடும் பொருட்டும் மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் ஏற்கத்தக்க வகையில் இல்லை என்பதால் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணத்தினை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது அனுமதிப்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.25 12:17:53 +0530

இறுதியாக மனுதாரரின் இம்மனுவானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.25 12:17:59 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.25 12:18:04 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.